முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1521

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.11.2023**, செவ்வாய்கிழமை

1. தவ பலமிக்க குருராஜனே
   தர்மனாக உலகில் வலம் வருகின்ற ஆறுமுக அரங்கனே
   வலம் வந்து உலகோரை மீட்கும் மகா சக்தியாக
   வள்ளலாய் வாழுகின்ற ஞான தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 12 ம் நாள், 28.11.2023, செவ்வாய்கிழமை)
   ஆசி தந்து அரங்கன் உன்னுள் யானிருந்து
   அற்புதத்தை அன்னதான சேவையாக
3. ஆகவே உலகமெல்லாம் கிளைகள் துவக்கி
   ஓங்காரக் குடிலாக உருவாக்கி ஆறுமுகன் யான்
   யானுமே அரங்கன் உன் அவதார நோக்கத்தை
   ஆற்றலாக இயக்கி வருகவே
4. ஞானம் வேண்டி உலகமெங்கும் அலையும் மக்களெல்லாம்
   ஞானி உன் குடில் நோக்கி வந்து தீட்சை ஏற்றால்
   ஏற்ற கணமே ஞான சித்தி எனும்
   இனிப்பிறவாத பெரும் பேற்றுக்குண்டான பலம்
5. பலமதும் இலகுவாய் என்னருளால்
   பழுதின்றி வருவோர் அனைவரும் கண்டு
   சலனமற உலகில் ஞானிகள் ஆக
   சாற்றிடுவேன் அரங்கன் உன்னால் உருவாக்கப்படுவரப்பா
6. அப்பனே அற்புதத்தை அரங்கன் நீ
   அன்னதானமாக அனைத்து மகா சூட்சுமமாக
   ஆகவே வழி நடத்தி இயக்கிவர
   வையகத்தில் உன் வழி தனிவழி

7. ஐயமற அரங்கன் உன்னை சரணடைந்தால்
அனைவருக்கும் ஞான வழி உறுதியாகும்
உறுதி கொண்டு உன் பதம் பற்றிவிட்டால்
உலகினில் இனி அவர்கட்கு பிறவி இல்லை
8. கருதிகருதி உன்பால் சரணாகதி கலியுகத்தில் கொண்டவர்க்கே
ஞானியாகும் வாய்ப்பு உறுதிஉறுதி
உறுதி தந்தேன் அரங்கன் உன் பலம் உலகம் அறிய
உரைத்திட்ட ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—